ஸ்ரீ

ஸ்ரீலக்ஷ்மீ வேங்கடேசாயநம:

OFFICE OF THE R...
10 OCT
MADRAS

# ஸ்ரீவேங்கடேச்வர ஸ்ரீபத்மாவதி சரிதம்.

(அலர்மங்கையம்மன் வரலாறு)

132



இது

ஸ்ரீவராஹ, பத்ம, பவிஷ்யோத்தர முதலிய அஷ்டாதச புராணங்களைக்கொண்டு ஸ்ரீதிருமலையின் ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் எழுந்தருளிய பிரபாவமும் ஸ்ரீலக்ஷ்மீ அலர்மங்கையாய் திருச்சானூரில் எழுந்தருளிய பிரபாவமும் மஹா தீர்த்த பிரபாவங்களும் அடங்கியது.

இது

திருச்சானூர் கெ. சுந்தரா சார்லு பிரதர்ஸ்

அவர்களால்

திருப்பதி ஸ்ரீவியாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1930.

இதன் விலை] [0—3—0.

Registered Copy Right.

# அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | திருவேங்கடன் துதி .... .... | 1 |
| 2. | சூதமாமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்கு ஸ்ரீதிருப்பதி ஸ்தல மஹாத்துவத்தைக் கூறுதல் | ,, |
| 3. | ஆதிவராஹ சுவாமி அவதரித்தல். .... | ,, |
| 4. | கருடன் வைகுண்டத்திலிருந்து கிரீடாசலத்தைக் கொண்டுவருதல். | 2 |
| 5. | நாரதர் கஸ்யபாதி முனிகளிடம் போதல். .... | 3 |
| 6. | திரிமூர்த்திகளை பிருகுமாமுனிவர் சோதித்தல். | 4 |
| 7. | மகாவிஷ்ணு மறுபடியும் பூலோகத்திற்கு வருதல். | 5 |
| 8. | சோழராஜன் சாபமடைதல். .... .... | ,, |
| 9. | வராக சுவாமியை ஹரி சந்தித்தல் ... | 6 |
| 10. | வகுளமாலிகையின் பூர்வ விருத்தாந்தம் .... | 7 |
| 11. | பத்மாவதிதேவியின் ஜனனம் ... | ,, |
| 12. | பத்மாவதிதேவி பிறப்பின் இரகசியம் ... | ,, |
| 13. | ஹரி பத்மாவதிதேவியைச் சந்தித்தல் .... | 8 |
| 14. | வகுளமாலிகையை தூது அனுப்புதல் .... | 9 |
| 15. | ஸ்ரீஹரி குறத்திவேடம் தரித்தல் .... | ,, |
| 16. | வகுளமாலிகை கல்யாண பிரஸ்தாபனை செய்தல் | 10 |
| 17. | பத்மாவதி விவாக மகோற்சவம் .... | 11 |
| 18. | குபேரனிடம் கடன் வாங்குதல் .... | ,, |
| 19. | ஸ்ரீஹரி நாராயணபுரம் சேருதல் .... | ,, |
| 20. | திருச்சானூர் மகத்துவம் ... .... | 12 |
| 21. | ஸ்ரீஹரி தவம் செய்தல் .... .... | ,, |
| 22. | ரம்பாதிகள் ஹரியை சோதித்தல் .... | 13 |
| 23. | லக்ஷ்மி கபில சம்வாதம் ... ... | 14 |
| 24. | அலர்மங்கா தேவியின் பிறப்பு ... | ,, |
| 25. | லக்ஷ்மி ஹரியை அடைதல் .... ... | 15 |
| 26. | ஸ்ரீதிருச்சானூர் அலர்மேல் மங்காபுரம் .. | 16 |
| 27. | ஸ்ரீதிருப்பதி பிரம்மோற்சவம் .... | 17 |
| 28. | திருச்சானூர் அலர்மேலுமங்கையம்மன் பிரம்மவுத்ஸவ கும்மி | ,, |
| 29. | ஸ்ரீவேங்கடேஸ்வர சிங்கார கும்மி ... | 19 |

10 OCT 1930

ஸ்ரீமத்



# திருப்பதி ஸ்தலபுராணம்.

## திருவேங்கடன் துதி.

திருவேங்கடாவென்றுத் தேடிக்கொண்டாடி உன் திருவடியை மனதில்நாடி
மறவாமல் துதிசெய்ய மலையானபாவமும் மாண்டுப்போம் மரணபவமும்
எரிகின்றதீயிலே யெரிந்திட்ட பஞ்சுப்போலெவ்வீதமானவகமும்
திருமலையில்வாய்ந்திடும் தேவகணபொன்மணியே திருவேங்கடத்துமணியே

## சூதமாமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்கு ஸ்ரீதிருப்பதி ஸ்தல மஹத்துவத்தைக் கூறுதல்.

ஸ்ரீ நைமிசாரணியவனத்தில் சௌனகாதி முனிவர்கள் சூதமகரிஷியால் சகல புராணங்களையுங்கேட்டு ஆனந்தித்தவர்களாய் ஓர் சுபதினத்தில் சூதமகரிஷியைப் பார்த்து ஓ சுவாமி! உலகத்தின்கண்ணுள்ள 108 திருப்பதிகளில் ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்டம், தோதாத்திரி சாலக்கிராமம், நைமிசம், பதரிகாஸ்ரமம், காஞ்சீபுரம், வெங்கடாசலமென்னும் 8 முக்கிய திருப்பதிகளில் வெங்கடாசலம் என்னும் இத்திருப்பதி எல்லாத் திருப்பதிகளிலும் விசேஷித்து சித்திஸ்தலமாய் விளங்குவதற்கு என்ன காரணமென்று கேட்டார்கள்.

## ஆதிவராஹ சுவாமி அவதரித்தல்.

இங்ஙனங்கேட்ட சௌனகாதி முனிவர்களைப்பார்த்து சூதமாமுனிவர் மந்தஹாசத்துடன் சொல்லத் தொடங்கினார்.

ஆதியில் ஸ்ரீமந் நாராயணன் திருநாபிக் கமலத்தில் சதுர்முகன் பிறந்து பூதபிரபஞ்சங்களைச் சிருஷ்டி செய்ய அவைகளை எம்பெருமான் காத்தருளி வந்தார். இவ்விதமாக நடந்துவர பிரம்மாவுக்கு பகல் காலமாகிய நாலாயிரம் யுகங்கள் முடிந்த பிறகு அவர் நித்திரை செய்தனர். அப்பொழுது பிரளயகாலம் நேரிட்டபடியால் சூரியன் அளவில்லாமல் அக்னி கிரணங்களை பூமியின் மேலில் வீசினான், மேகங்கள் அபாரமாக மழை பெய்தன. அப்பொழுது ஜலப்

பெருக்கு அதிகரித்தபடியால், அந்த பாரத்தைத்தாங்காது பூமி கடலுக்குள் மூழ்கிவிட்டது. அதை இரண்யாக்ஷன் என்கிற ஓர் அசுரன் ரஸாதல லோகத்துக்குக் கொண்டுபோய் வைத்திருந்தான். பிரம்மாவின் இரவுகாலம் முடிந்து அவர் தூக்கத்திலிருந்து விழிக்கிற சமயத்தில், நாராயணன் சுவேதவாாக அவதாரத்தைக்கொண்டு கடலுக்குள் மூழ்கி மறுபடியும் பூமியை மேலுக்கு எடுக்கையில், இரணியாக்ஷன் அவரைத் தடுத்து சண்டை செய்ய ஆரம்பித்தான். அப்பொழுது ஹரி வீராவேசத்துடன் அவன் சிரசைத் துண்டு துண்டுகளாய் கோரைப்பற்களால் கிழித்துக்கொன்றார். அந்த ரக்தமானது பிரளயஜலத்துடன் கலந்து ரக்தகடலைப்போல் நிரம்பி விட்டது. அதை தேவகணங்கள் பார்த்து பயந்தவர்களாய் வராஹ சுவாமியை நோக்கி அநேக விதங்களாய்த் துதித்தார்கள்.

## கருடன் வைகுண்டத்திலிருந்து கிரீடாசலத்தைக் கொண்டுவருதல்,

பகவான் இவ்வாறு செய்து திரும்பிப் பார்க்கையில் கைகளைக் கட்டிக் கொண்டு அடியேனாய் நின்றிருந்த கருடனைப் பார்த்து ஓ பக்ஷிராஜனே! நான் இந்த பயங்கர உருவத்துடன் வைகுண்டம் வந்தால் என்னைப் பார்த்து லக்ஷ்மிதேவி பயப்படாளோ, ஆகையால் நான் இந்த பூமியிலேயே வீற்றிருப்பேன் என்று சொன்னார். அதைக் கேட்டு பக்ஷிராஜன் பகவானை நமஸ்கரித்து சுவாமி! உங்களுடைய பயங்கர உருவத்தைப் பார்த்து அந்த லோகமாதா பயப்பட மாட்டார்கள். நீங்கள் வைகுண்டம் வரலாமென்று பிரார்த்தித்தான். அதைக்கேட்டு கடவுள் நான் உலகத்தின் கண்ணின்று துஷ்டர்களைச் சிக்ஷித்து பக்தர்களைக் காத்தருள் வேண்டுமாகையால், நீ வைகுண்டம் சென்று லக்ஷ்மிதேவியிடம் தெரிவித்து கிரீடாசலத்தைக் கொண்டு வரும்படி உத்தரவளித்தார். கருடன் ஹரி கட்டளையின்படி வைகுண்டம் சென்று லக்ஷ்மிதேவியிடம் சங்கதிகளைச் சொல்ல, அத்தேவி அந்த வராகமூர்த்தியைப் பார்க்க வேண்டுமாதலால், அவரை வைகுண்டத்திற்கு அழைத்துக் கொண்டு வாவென்று சொல்ல, அதைக்கேட்டு கருடன் [illegible] அவரையழைக்க அவரது பயங்கரமான ரூபத்தைப்பார்த்து நீங்கள் பயப்படுவீரென்று சொன்னாரென்றான்.

லக்ஷ்மியம்மன் மிகுந்த ஆச்சரியத்துடன் அதைக் கேட்டு ஆ! ஹா! பரந்தாமன் அவ்விதமாய்ச் சொன்னாரா? எல்லா அவதாரங் களிலும் அவர் வக்ஷத்தில் இருந்த நான் அவர் ரூபத்தைப் பார்த்து பயப்படுவேனா? ஆனாலும் அவர் இவ்விடம் வராமல் போனாலும், நான் அவ்விடம் வருவேனென்று சொல்லி வைகுண்டத்திலுள்ள ஓர் கலையோடு தான் கிரீடாசலத்தின் பேரில் எழுந்தருள, கருடன் அப்பர்வதத்தை சிரசின்பேரில் வைத்துக்கொண்டு பூமிக்குக் கொண்டு வந்தான். அப்போது பூமியில் சுவாமிகள் கௌதமி யாற்றிற்கு தெற்கில் 60 யோசனை கிழக்கு உப்புக்கடலுக்கு மேற்கில் 5 யோசனை தெற்காயிருக்கும் சுவர்னமுகி ஆற்றிற்கு வடக்கில் திவ்விய ஸ்தலத்தைப் பார்த்து வீற்றிருக்கையில், கருடன் கிரீடாசலத்தைக் கொண்டுவந்து பூமியின் பேரில் வைத்தான். அப்பொழுது ஹரி லக்ஷ்மி பூநீளாதேவிகளுடன், அப்பர்வதத்தின் பேரில் எழுந்தருள, பிரம்மருத்திராதி தேவ கணங்கள் அவ்விடம்வந்து, அந்தவராகசுவாமிக்கு சாஷ்டாங்க தண்டனிட்டு, சாந்த ஸ்ரூபத்தைத்தரித்துக் காத்தருள்வேண்டு மென்றுபிரார்த்தித்தார்கள். அவ்விதமாகவே லக்ஷ்மீசந் சௌமிய ரூபத்துடன் ஸ்ரீதிருப்பதியில் எழுந்தருளியவராய், துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்துக்கொண்டு வந்தார்.

## நாரதர் கஸ்யபாதி முனிகளிடம் போதல்.

இவ்வண்ணம் வெகு காலமான பின்பு ஸ்ரீபூநீளாசமேதராய் ஹரி வைகுண்டத்திலுள்ள நித்தியமுக்தர்களைப் பார்த்து ஆதரிக்க ஆவலுள்ளவராய் போக வெங்கடாசலத்திலிருந்த வராகசுவாமி விஸ்வகர்மாவால் நிர்மிதமாகிய பட்டணத்தை அந்தர்த்தானம் செய்து இச்சாவிகாரமாய்த் திரிந்துக்கொண்டிருந்தார். இந்த சங் கதியை திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவர் அறிந்து தன் தகப்பனான பிரம்மாவிடம் சொன்னார். பிரம்மதேவர் அதைக் கேட்டு சிந்தித்தவராய் தன் குமாரனை நோக்கி ஹரி பூமியின்கண் இல்லாவிட்டால் மானிடர்கள் பக்தி சிரத்தைகளுடன் சத்கர்மங் களைச் செய்யாமல் பாவசம்பந்தர்களாய் விடுவார்களாகையால் எவ் விதமாகிலும் நீர் ஓர் யுக்தியைச் செய்து ஹரியை மறுபடியும் பூமிக்கு வரவழைக்கவேண்டு மென்று சொன்னார். அதைக் கேட்டு நாரதர்

புரப்பட்டு சானவி ஆற்றங்கரையில் எக்யம் செய்துக் கொண்டிருந்த கஸ்யபாதி முனிவர்களிடம் சென்று அவர்களை நோக்கி ஓ முனிவர்களே! நீங்கள் செய்யும் எச்ய பலத்தை யாருக்கு தருவீரென்று கேட்டார். அதற்கு அம்முனிவர்கள் மனதிற்கு ஒன்றும் தோன்றாமல் யோசித்துக் கொண்டிருக்க, நாரதர் திரிமூர்த்திகளில் சத்வகுண சம்பன்னராய் மோக்ஷத்தைக் கொடுக்க கூடிய மூர்த்திக்கு அப்பலனைக் கொடுங்களென்று சொல்லி திரிலோக சஞ்சாரம் செய்யப் புறப்பட்டுப் போய்விட்டார்.

## திரிமூர்த்திகளை பிருகுமாமுனிவர் சோதித்தல்.

இங்ஙனம் சொல்லி நாரதர் சென்றதும் கஸ்பாதி முனிவர்கள் திரிமூர்த்திகளில் சத்வகுண மூர்த்தியை விசாரித்து தெரிவிப்பதற்காக பிருகு மகாமுனிவரை யனுப்பினார்கள். பிருகு மகாமுனிவர் சத்தியலோகஞ் சென்று தபோதனர்கள் சூழ்ந்து வீற்றிருக்கும் பிரம்மதேவனைப்பார்த்து நமஸ்கரித்து அவர் உத்தரவளிப்பதற்கு முன் ஆஸனாரூடராய் இருக்க அதைப் பார்த்த பிரம்மதேவர் கோபங்கொண்டு மவுனமாயிருக்க அவர் ரஜோகுணத்தரென்றறிந்து, கயிலாயத்திற்குச் சென்று பார்வதி சமேதராயிருந்த சிவபெருமான் அரண்மனைக்குள் திடீரென்று சென்று நின்றார். அந்தரசவியமான இடத்திற்கு உத்தரவின்றி வந்ததற்காக சிவன்கோபத்துடன் இருந்ததையறிந்து அவர் தமோகுணரென்றறிந்து பிறகு முனிவர் வைகுண்டஞ்சென்று விஷ்ணுவின் மார்பின்பேரில் தன் பாதத்தால் உதைத்தார். அதைப்பார்த்து மஹாவிஷ்ணு கோபித்துக் கொள்ளாமல் திடீரென்று எழுந்து அம்முனிகளுடைய பாதத்திற்கு எவ்வளவு வலியுண்டாயிற்றோ வென்று வருத்த, அதைப் பார்த்த பிருகு மகாமுனிவர் ஹரியே சத்வகுணரென்றறிந்து கஸ்யபாதி முனிவர்களிடஞ்சென்று அவ்வாலாற்றைச்சொல்ல அவர்கள் எச்யபலத்தை பகாவிஷ்ணுவுக்குச் சமர்ப்பித்து அனுதினமும் ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளை தியானித்துக் கொண்டிருந்தார்கள்.

## லக்ஷ்மிதேவி ஹரியுடன் கலகம் செய்தல்.

அவ்விதமாய் பிருகு மாமுனிவர் ஹரியின்மார்பில் உதைத்துப் போக மார்பிலிருந்த லக்ஷ்மியம்பன் பிருகு முனிவர் செய்த காரியத்துக்கு ஹரி அவரை தண்டிக்காமல் சன்மானித்தபடியால் கோபித்

துக்கொண்டு பகவான் எவ்வளவுசாந்த வசனங்கள் சொன்னு லும் கேளாமல் வைகுண்டம்விட்டுபுறப்பட்டு பூலோகத்தில் கொல் லாபுரம் வந்து சேர்ந்தனள். கொல்லாபுரத்திலுள்ள பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் அத்தேவியைப் பூஜித்துக்கொண்டு வர லக்ஷ்மியம் மனுக்கு கொல்லாபுர மகாலக்ஷ்மி யென்று உலகத்தில் பிரசித்தி யுண்டாயிற்று.

## மகாவிஷ்ணு மறுபடியும் பூலோகத்திற்கு வருதல்.

இவ்விதமாய் லக்ஷ்மியம்மன் பிரிந்து செல்ல மிருந்த வருத்த மடைந்தவராய் லக்ஷ்மிதேவியை மறுபடியும் அடைவதற்கெண்ணி சுவாமியும் வைகுண்டத்தைவிட்டு திருப்பதிக்குவந்து பிரம்மாவால் நிர்மாணம் செய்திருந்த ஓர் புத்துக்குள் பிரவேசித்திருந்தனர்.

## சோழராஜன் சாபமடைதல்.

சுவாமி இவ்விதமாய் புற்றில்வந்து சேர்ந்திருக்க, தனக்காக அவர் அவ்விதமாய் வந்திருப்பதை யறிந்து லக்ஷ்மியம்மன் மனவ் ருத்தமடைந்திருக்கையில் பிரம்மாவும் ருத்திரனும் பசுங்கன்று ரூபங் களை தரித்துக்கொண்டு லக்ஷ்மியம்மன் முன்னிலையில் வந்து நிற்க அத்தேவிசந்தோஷித்து சோழராஜனுடைய ஊருக்குள் அந்த பசுங் கன்றுகளை யழைத்துக்கொண்டுபோய் விற்றுவிடுகிறதாக வீதிகளில் சாமானிய மானிடவேடம்பூண்டு விலை கூறினள். அதைக்கேட்டு சோழராஜன் மனைவி குழந்தைகளுக்கு பால்வேணுமென்றெண்ணி அந்த மாயஸ்திரீக்கு வேண்டிய பொருள் கொடுத்து அந்த பசுங் கன்றுகளை வாங்கி தங்களுக்குள்ள 2000 பசுங்களோடு சேர்த்து இடையனுக்கு ஒப்புவித்தாள். அந்த பசுக்கன்றுகள் தினந் தோறும் தவறுமல் திருமலையேறி புற்றினிடம் வந்து க்ஷீரத்தால் அப்பற்றிலிருந்த சுவாமியை திருப்தி செய்துகொண்டு வந்தார்கள். லக்ஷ்மியம்மன் அதையறிந்து சந்தோஷமுள்ளவளாய் மறுபடியும் கொல்லாபுரம் சேர்ந்திருந்தனள். இப்படி யிருக்க தான் வாங்கிய பசுவுக்கு பாலில்லாமல் போவதை சோழராஜன் மனைவியறிந்து இடையனை தண்டித்து பசுவுக்கு பாலில்லாமல் போகிற காரணத் தைக் கண்டு பிடிக்கும்படி கண்டிதமான உத்தரவளித்தாள். அதற்கு மேல் இடையன் அந்தப் பசுவோடுகூட மறுநாள் புறப்பட்டுப்போக அந்தப்பசு வெங்கடமலைமீதேறி புற்றினிடமாகவந்து பாலை

விட்டு விடுவதைப் பார்த்து கோபங்கொண்டு தன் கையிலிருந்த கோடாலியினுல் அதன் நெற்றியின்பேரில் அடித்தான். அப்பொழுது ஹரி தனக்காக பசு அடிப்படக்கூடாதென்று தன்னுடைய சிரஸைக்கொடுத்தபடியால் ஹரியின் நெற்றியில் வெட்டுப்பட்டு எழுபனை உயரம் ரக்தபிரவாகம் உண்டாயிற்று. அதைப்பார்த்து இடையன் பயந்து நடுநடுங்கி கீழேவிழுந்து உதைத்துக்கொண்டு மடிந்தான். அந்த சங்கதிகளை விசாரிக்கும் பொருட்டு பரிவாரங்களுடன் சோழராஜன், அப்புற்றிடம்வர, ஹரி அவனை பேயாய்ப் போகக்கடவதென்று சாபமளித்தார். அப்பொழுது சோழராஜன் பயந்து சாபவிமோசனமடையவெண்ணி ஹரியை அநேக விதமாகப்பிரார்த்தித்துக் கொள்ள, பரந்தாமன் அவன் சாபம் கலியுக முடிவில் தீருமென்றும், ஆகாயராஜன் பெண்ணுகிய பத்மாவதியைத் தான் விவாகம்செய்து கொள்ளும்போது நூருகஜம் நீளமுள்ள நவரத்தின கசிதமான பொன் மகுடத்தைச்செய்து சமர்ப்பித்தால் அதை பிரதி சுக்ரவாரம் 6 நாழிகை தரிப்பேனென்றும், அப்போதுமாத்திரம் பேய்ரூப மில்லாமற் போகுமென்றும் சொன்னுர்.

## வராக சுவாமியை ஹரி சந்தித்தல்.

கடவுள் தன் சிரசின் பேரில் அடிப்பட்டதற்காக பிரஹஸ்பதியை நினைக்க, அவர் சுவாமியின் முன்தோன்றி பஞ்சை எருக்கம் பாலில் துவைத்து கட்டினுல் சிரசின்பேரில்பட்ட காயம் ஆறிப்போகுமென்று சொல்லிப்போயினுர். சுவாமி தன் மருந்தை தானே கொண்டு வருவதற்காக புறப்படுப் போகையில் எதிரில் விருஷபாசுரனைச் சங்கரித்து வந்துக்கொண்டிருந்த வராஹ சுவாமியை பார்த்து தான் வைகுண்டத்தில் லக்ஷ்மிதேவியை பிரிந்தது முதல் நடந்த வரலாற்றைத் தெரிவிக்க வராகசுவாமி ஹரிக்கு, நூறடி நில மளந்து கொடுத்து தன்னிடம் சமயல் செயதுக் கொண்டிருந்த வகுளமாலிகை என்பவளை சுவாமிக்கு உபசாரணை செய்யும்படி நேமித்தார். அதற்காக சுவாமி சாமானிய நரனைப்போல் பக்த ஜனங்களிடம் பிரார்த்தனை மூல்யமாய் பணங்களை வாங்கி நிலத்தின் கிரயத்தை கொடுக்கிறதாகவும், முன்பூஜை முன்போஜனம் வராஹ சுவாமிக்கு கொடுத்துப் பின்னுல் தான் புசிக்கிறதாகவும் ஒப்புக்கொண்டனர்.

## வகுளமாலிகையின் பூர்வவிருத்தாந்தம்.

துவாபரயுகத்தில் கிருஷ்ணனை வளர்த்துக்கொண்டாடிய எசோதாதேவியை பிரம்மா ருணனுபகத்தால் ஓர் சாதாரண ஸ்திரீயாக உற்பத்தி செய்து வராஹ சுவாமிக்கு சமயல்செய்து அவருக்கு உபசாரணை செய்யும்படி வராஹ சுவாமி சந்நிதியில் நியமித்திருந்தார். அவள்தான் வகுளமாலிகை என்பவள்.

## பத்மாவதி தேவியின் ஜனனம்

பாண்டவ தவ்ஹத்திரி வம்ஸத்தில் சேர்ந்த ஆகாஸராஜனென்கிற ஓர் மன்னன் நாராயணபுரத்தில் அரசாக்ஷி செய்துக்கொண்டிருந்தான். அவன் தாணிதேவியென்கிற ஓர் பெண்ணை விவாகம் செய்துக்கொண்டு வெகுகாலமாய் புத்திரசந்தானமில்லாது போனதால் புத்திரகாமேஷ்டியாகம் செய்வதற்கு நிச்சயித்து பூமியை உழுகையில் அதில் ஆயிரம் இதழ்களுள்ள ஓர் தாமரைக்கமலமும் கமலத்தில் ரூபலாவண்ணியமுள்ள ஓர் பெண்குழந்தையும் இருப்பதைப்பார்த்து சந்தோஷித்தவனுய் அதை தன்மனைவியான தாணிதேவியினிடம் கொடுத்து பத்ம மலரில் பிறந்த அந்தப் பெண்ணுக்கு பத்மாவதியென்னும் பேரளித்து அத்யந்த பிரீதியுடன் வளர்த்துக் கொண்டு வந்தான்.

## பத்மாவதிதேவி பிறப்பின் இரகசியம்.

பூர்வத்தில் லங்காதிபதியாகிய ராவணன் சீதையை கொண்டுபோகையில் அக்னிபகவான் அவன் எதிரில்வந்து அடா நீ எடுத்துக்கொண்டு போகும் சீதை உண்மையான சீதையல்ல, இராமர் உண்மையான சீதையை என்னிடம் கொடுத்துப்போனுரென்று சொல்லி வேதவதியை உண்மையான சீதையென நிரூபித்து ராவணனிடம் கொடுத்து சீதையை ஒளித்துவைத்திருந்தார். ஸ்ரீராமர் வானர சைனியங்களோடு இலங்கைக்குச சென்று ராவணனைக் கொன்று மறுபடியும் அயோத்தியாநகரம் சேர்ந்து சீதையம்மனை அக்கினி குண்டத்தில் பிரவேசிக்கும்படி கட்டளையிட அத்தேவி அவ்விதமாகவே அக்கினியில் பிரவேசித்துநிற்க அந்த அக்கினியில் இரண்டு சீதைகள் இருப்பதைப்பார்த்து ஸ்ரீராமர் ஜானகிதேவியை இந்த ரகஸியத்தை சொல்லுமென கேட்க சீதையம்மன் நடந்த

விபரங்களை தெரிவித்து தனக்காக இலங்கையில் அநந்த கஷ்டங்களை யனுபவித்த வேதவதியை விவாகஞ் செய்துக்கொள்ளுமென பிரார்த்தனள். அதற்கு ராமர் தான் ஏகபத்னி விரதனானதால் கலியுகத்தில் ஸ்ரீ வெங்கடாசலத்தில் அவதரிப்பேன், அக்காலத்தில் வேதவதியை மணம் புரிவேனென்று சொன்னார். ஆகையால் அந்த வேதவதி ஆகாசராஜனுக்கு பெண்ணாய் பத்மத்தில் உதித்து பத்மாவதியென்று பிரசித்தியடைந்தனள்.

## ஹரி பத்மாவதிதேவியைச் சந்தித்தல்.

பத்மாவதிதேவி வளர்ந்து யௌவன பருவமடைந்து தன் தோழிமார்களுடன் ஒருநாள் நந்தவனத்தில் பூக்கொய்து விளையாடிக்கொண்டிருந்தனள். இப்படியிருக்கும் சமயம் அவ்விடம் நாரதமுனிவர் வர, அவரைப்பணிந்து பத்மாவதி தன் கையைக்காட்டி சாமுத்திரிகம் சொல்லுமெனக்கேட்க நாரதர் பத்மாவதியின் அஸ்தத்தைப்பார்த்து உன்னை ஸ்ரீமந் நாராயணனே பாணிக்கிரஹணம் செய்துக்கொள்ளுவாரென்றும் சொல்லிப்போனார் ஒருநாள் புற்றிலிருந்த ஸ்ரீநிவாச மூர்த்தி வெண்குதிரை மீதாரூகணித்து வேட்டையாடுவதற்கு புறப்பட்டு வருகையில் அவர் கண் முன் ஓர் யானை புலப்பட அதைத் துரத்திக் கொண்டு வந்தார். அந்த யானை வெகுதூரம் ஓடிவந்து தன்னைப் பின்தொடர்பவரைத் திரும்பிப்பார்த்து ஜகத்ரக்ஷகனென்று தெரிந்துக்கொண்டு ஹரியைப்பணிந்து காத்தருளுமென வேண்டிற்று. ஸ்ரீநிவாசன் அந்தயானையை இரக்ஷித்து திரும்புகையில் நந்தவனத்தின்கண் பூக்கொய்துக்கொண்டிருந்த பத்மாவதியைப்பார்த்தார். பத்மாவதியைக்கண்டதும் குதிரையினின்று மிழிந்து பத்மாவதியின்பேரில் அடங்காக்காதலுடையவராய் அவள் சமீபத்தில் சென்று தன்னை விவாகம் செய்துக்கொள்ளும்படி கேட்டார். அதைக்கேட்டதும் பத்மாவதி சினந்து தன்தோழிகளைக்கொண்டு ஹரியை கற்களால் அடிக்கும்படி செய்தனள். அப்பொழுது அவ்வடிகளைத்தாளாமல் ஹரியானவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுபோய் புற்றில் சேர்ந்து பத்மாவதியினுடைய ரூபலாவண்யங்களை நினைத்துருகியதே சிந்தனையிலாழ்ந்திருந்தார்.

## வகுளமாலிகையை தூது அனுப்புதல்.

புற்றில் சேர்ந்து பத்மாவதியை நினைத்துக்கொண்டு மவுனமாய் இருந்த ஹரியை வகுளமாலிகைகண்டு விசாரித்து அவர் மனோ அபிப்ராயத்தைத்தெரிந்து ஸ்வாமீ நான் எவ்விதமானாலும் பத்மாவதியை உங்கள்மீது பிரியமுள்ளவளாகும்படி செய்வேனென்று சொல்லி ஸ்வாமியின் உத்திரவு பெற்றுக்கொண்டு ஆகாசராஜன் பட்டணத்துக்கு புரப்பட்டாள். வகுளமாலிகை அப்பட்டணத்திற்கு வருவதற்கு முன்பாக,

## ஸ்ரீஹரி குறத்திவேடம் தரித்தல்.

ஹரி குறத்திவேடம் தரித்துக்கொண்டு வகுளமாலிகை யுக்தியாக விவாஹபிரஸ்தாபனே செய்வாளோ செய்யமாட்டாளோ என்று சந்தேஷித்து ஆகாசராஜன் பட்டணமாகிய நாராயணபுரத்தில் பிரவேசித்து வீதிகளில் குரிச்சொல்லுவேன் என்றும் பச்சைகுத்துவேன் என்றும் கூறினார். இப்படி இருக்க நாராயணவனத்தில் பத்மாவதி நந்தவனத்தில் ஹரியைக் கண்டது முதல் தாபஜ்வரமுள்ளவளாய் அன்னபானங்களின்மேல் இஷ்டமில்லாமல் விசனத்துடன் இருந்தாள். அதைதெரிந்து தாய்தந்தைகளாகிய தரணிதேவியும் ஆகாசராஜனும் மிகவும் விசாரப்பட்டு பிராம்மணோத்தமர்களை வரவழைத்து பத்மாவதியின் நிஜஸ்திதியை சொல்ல அவர்கள் ருத்திராபிஷேகம் செய்து அஜ்ஜலத்தை கொடுத்தால் தாபஜ்வரம் நீங்குமென்றார் அப்பொழுது அரசன் அபிஷேகம் செய்வதற்கு ஏர்பாடு செய்ய கோவிலிடம் அனேக சுமங்கலி ஸ்திரீகள் வந்துசேர அவர்களோடு வகுளமாலிகை சேர்ந்துக்கொண்டு தன்னையும் தரணிதேவி யிடத்திற்கு இட்டுக்கொண்டுபோகும்படி கேட்டுக்கொண்டாள். இப்படியிருக்க ஊரில் குரத்தி குரிசொல்லுகிறதென்று தரணிதேவி கேள்விப்பட்டு குரத்தியைவரவழைத்தாள் தரணிதேவி குரத்தியை தனக்கு குரிசொல்லும்படிகேட்க அதற்கு குரத்திவேடம் பூண்ட ஹரி இவ்வாரு சொல்ல தொடங்கினார். உன் எண்ணமானது கைகூடிவரும் நீ உன் பெண் குழந்தைபேரில் ஒரு எண்ணம் கொண்டிருக்கிறாய். அவள் பூந்தோட்டத்தில் ஒரு புருஷனைக்கண்டு அதனால் தாபஜ்வரமடைந்தாள் அந்த புருஷன் யார்யென பொன்மலையின் பேரில்பட்ட நாமத்தை தரித்துக்கொண்டு

சரணமடைந்தவர்களை ரக்ஷித்துகொண்டும் தருமவிரோதிகளை நசிக்கச் செய்துகொண்டும் இருப்பார். அவர் ஸ்ரீமந்நாராயணரே தவிர நரனல்ல. அவர் உன் பெண்ணை விவாகம் செய்வதற்கு எண்ணம் கொண்டிருக்கிறார். உன் பெண்ணும் அவர்பேரில் பிரியம்கொண்டிருக்கிறாள். ஆகையால் அவருக்கு உன் பெண்ணை கொடுத்து விவாகம் செய்தால் சுகமாய் வாழ்வாள். இன்னும் கொஞ்சம் நேரத்தில் கல்யாண பிரஸ்தாபனை செய்வதர்காக ஓர் பெண்பிள்ளை வருவாள் நான் சொன்ன தெல்லாம் உண்மையான பிறகு இனும் வாங்கி கொள்ளுகிறேனென்று சொல்லி எழுந்து அப்புரம்போய் தன் நிஜரூபத்தை கொண்டு ஸ்ரீஹரி திருவேங்கடமலையைசேர்ந்தார்.

## வகுளமாலிகை கல்யாண பிரஸ்தாபனை செய்தல்.

ருத்திராபிஷேகத்தின் தீர்த்தத்தை சுமங்கலி ஸ்திரீகள் தரணி தேவியினிடம் கொண்டுவர அதை தரணிதேவி பத்மாவதிதேவிக்கு கொடுத்தாள். வகுளமாலிகை சுமங்கலி ஸ்திரீகளை கூட்டிவந்து தரணிதேவியைப்பார்த்து நமஸ்கரிக்க தரணிதேவி நீ யாரென விசாரிக்க அதற்கு வகுளமாலிகை இவ்வாறு சொல்லுகிறாள். ஓ தரணி தேவி நான் திருப்பதியிலிருக்கும் வெங்கடாசலபதி அனுப்பிவந்தேன். கல்யாண விஷயமாய் என்னை அவர் அனுப்பினர். உன் பெண்ணாகிய பத்மாவதியை அவருக்கு கொடுத்து விவாகம் செய்யும்படி பிரார்த்திக்கிறேன். என் பேர் வகுளமாலிகை யென்றாள். அதற்கு தரணிதேவி அவர் குல கோத்திரங்கள் என்னவென்று கேட்க வகுளமாளிகை அவர் தாய் தந்தை தேவகி வசுதேவரென்றும் அவர் வம்சம் சந்திரவம்ச மென்றும் வசிஷ்ட கோத்திர மென்றும் அவர் ரூபலாவண்ணியத்தில் மன்மதனைப்பெற்றெடுத்த மகா பிரகாச வைபவமுள்ள ஸ்ரீ மகாவிஷ்ணுவை ப்போன்றவரென்றும் சொன்னாள். அதைக்கேட்ட தரணிதேவி மிகுந்த சந்தோஷத்துடன் பர்த்தாவுக்கு தெரிவிக்க அவரும் மகா பாக்கியமென்று சம்மதித்து விவாகத்திற்கு லக்கினம் ஏற்பாடுசெய்ய தன் குருவாகிய சுகமகரிஷியை வரவழைத்து கல்யாணபத்திரிகையை எழுதினர் அப்பத்திரிகையில் மஞ்சள் தடவி சுகரிடம் கொடுத்து அனுப்பித்தார். அதை சுகர் எடுத்துக்கொண்டுபோய் வேங்கடமலையின்பேரில் எழுந்தருளிய பரந்தாமன் கையில் கொடுக்க அவரதைப்படித்து வளர்பிறை தசமி

ராத்திரி சுபமுகூர்த்தத்திற்கு நாங்கள் இஷ்டஜனபந்து சமேதர்களாய் அவ்விடம் வருகிறோமென்று எழுதி சுகரிடம் கொடுத்தனுப்பிவிட்டார்.

---

## பத்மாவதி விவாக மகோற்சவம்.

இந்த சேதி கருத்மந்தனும் தேவகோடிகளுக்கு தெரிவிக்க பிரம்மதேவர் சாவித்திரி, காயத்திரி, ஸரஸ்வதிசமேதராய் அம்ஸவாகணமேரியும், பரமேஸ்வரர் பார்வதி சமேதராய் நந்திவாகனமேரியும், திக்பாலகர்களும், மகரிஷிகளும், தேவகணங்களும், இந்திரன், சூரிய சந்த்ர முதலியவர்கள் திருவேங்கடமலைக்குவந்து சேர்ந்தார்கள். அப்பொழுது வசிஷ்டர் வராகஸ்வாமி சன்னதியில் எக்கிய காரியங்களைச்செய்து வந்தார். பிரம்மதேவர் கல்யாண பீடத்தை நிர்மித்தார். பார்வதி முதலியவர்கள் ஸ்வாமிக்கு அப்பியங்கினம் செய்வதற்காக ஹரியை கூப்பிட அவர் லக்ஷ்மிதேவி விவாகத்திற்கு வாராத குறையை தெரிவிக்க சூரியனை லோகமாதாவாகிய லக்ஷ்மிதேவியை அழைத்துக்கொண்டு வருவதற்கு கொல்லாபுரம் அனுப்பித்தார்கள். சூரியன்லக்ஷ்மியம்மனை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான்.

## குபேரனிடம் கடன் வாங்குதல்.

கல்யாண சிலவுக்காக பணம் வேணுமே யென்று சிந்தித்து பிரகு குபேரனிடம் 1 கோடி பதினாலுலக்ஷம் 1,1400000 பணம் வாங்கி அதற்கு வருஷந்தோரும் வட்டி கட்டும்படியாகவும் கலியுகம் முடிவில் அசலை கொடுக்கும்படியாகவும் பத்ரம் எழுதி அதற்கு சங்கரனும், பிரம்மாவும் சாக்ஷிகளாக, ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் வெங்கடேசப்பெருமாள் வட்டிகாசு பெருமாளென்று பேருள்ளவராய் பிரார்த்தனை மூலமாக ஜனங்களிடம் பணம் வாங்குவார்.

## ஸ்ரீஹரி நாராயணபுரம் சேருதல்.

அப்பொழுது அருந்ததி முதலிய ஸ்ரீரத்தினங்கள் சோபன பாட்டுகளைபாட மங்கள வாத்தியங்கள் சப்திக்க மகாலக்ஷ்மியும் பார்வதி சாவித்திரி சரஸ்வதி இந்திராணி முதலியவர்கள் ஆலாத்தி

எடுக்க குமாரஸ்வாமி பாண்டவ தீர்த்தம் முதல் ஸ்ரீசைலம் வரை யிலும் இருக்கும் ஸ்தலத்தை பரிசுத்தம் செய்ய வாயுதேவனும் பிரம்மாவும் தேவேந்திரன் முதலிய சகல தேவகணங்கள்கூடி அவரவர்களுடைய வாகனங்கள் யேறி ஸ்ரீஹரியுடன் புறப்பட்டு நாராயணபுரம்வர ஆகாசராஜன் மந்திரி பரிவாரங்களோடு எதிர் நோக்கிப்போய் அவர்களை அழைத்து விவாகமகோற்சவத்தை அதி யற்புதமாக நடத்த சர்வதேவகணங்கள் புஷ்பவருஷங்களை அபார மாக வருஷித்தார்கள். சொல்லமுடியாத வைபவத்துடன் விவாக மகோற்சவம் நடந்தேற ஸ்ரீவெங்கடேசப் பெருமான் பத்மாவதி யுடன் கூடி தங்கமலையாகிய திருவேங்கடமலையை ச்சேர்ந்து மிகுந்த வைபவத்துடன் கிரீடித்துக்கொண்டிருந்தார்

## ஸ்ரீ திருச்சானூர் மகத்துவம்.

அநேக காலம் ஸ்ரீவெங்கடாசலத்தில் பத்மாவதி தேவி யுடன் கூடி கிரீடித்துக்கொண்டு இருந்தும் லோகமாதாவாகிய லக்ஷ்மியம் மன் மார்பில் இல்லாத குறையினல் ஸ்ரீமகா விஷ்ணு சிந்தையுள்ளவ ராய் ஸ்ரீலக்ஷ்மிதேவியை தேடவேண்டு மென்கிற உத்தேசம் கொண்டு பத்மாவதிக்கு சமாதானம் சொல்லி கொல்லாபுரத்திற்கு புரப்பட் டார் ஸ்ரீமகாவிஷ்ணு தன்னை தேட வருகிறுரென்றறிந்து, நேரில் ஸ்வாமிவந்து கூப்பிட்டால் வரமாட்டேனென்று சொல்லுவது மரியாதை யாகதென்றெண்ணி கொல்லாபுரத்தை விட்டு பாதாள லோகத்தில் விசேஷ யோகமகிமையினல் பிரகாசித்துக்கொண்டிருக் கும் கபில மாமுனியின் ஆஸ்ரமத்தை போய்ச்சேர்ந்தாள்.

## ஸ்ரீ ஹரி தவம் செய்தல்.

பிறகு ஸ்ரீமந்நாராயணன் கொல்லாபுரத்திற்கு போய் லக்ஷ்மி காணுமல் போனதைப்பற்றி மிகுந்த விசனப்பட்டுக்கொண்டு காடு மேடுகளும் குகை களும் தேடி, மறுபடியும் கொல்லாபுரம் சென்று பூர்வத்தில் அகஸ்த்திய மாமுனி பூஜித்துக் கொண்டிருந்த லக்ஷ்மி விக்கிரகத்தைப் பார்த்து மோகமடைந்து 10 வருடம் தவம் செய்துக் கொண்டிருக் கையில் அசரீரவாணி அவரைப்பார்த்து இவ்விதமாக சொல்லத் தொடங்கினள், ஸ்வாமி நீர் இவ்விடத்தில் தெற்கில் கிருஷ்ணவேணி ஆற்றிற்கு அப்புரத்தில் சுவர்ணமுகி ஆற்றிற்கு வடக்கில் சுகாஸ்ரமத்தில் நின்று தபவியாய் சுவர்க்க லோகத்தி லிருந்து ஆயிரம் இதழ்களுள்ள தாமரைகமலங்களை வரவழைத்து

திருகுளத்தை வெட்டி அதில் அவைகளை பிரகாசிக்க செய்து வாடாமல் இருப்பதற்காக அக்குளத்திற்கு கிழக்கில் சூரியனை பிரதிஷ்டை செய்து அந்த கமலத்தின்பேரில் திருஷ்டியை நிருத்தி மனதில் லக்ஷ்மி மந்திரத்தை தியானித்துக்கொண்டு தவம் செய்தால் லக்ஷ்மிதேவி பிர்ஸன்னமாய் உன்னை மருபடியும் அடையு மென்று சொல்ல அசரீரவாணி வாக்கின்படிக்கே அகஸ்தியாஸ்ரமம் வழி யாய்ப்போம் சுகாஸ்ரமத்தை சேர்ந்து வாயுபகவானை தியானிக்க அவர் பிரஸன்னமாய் அஞ்சலி பந்தராய் நிற்க யவரை ஸ்வாமி கண்டு ஓ மாருதி நீ தேவலோகம் சென்று தேவேந்திரனைக்கண்டு மந்தரகிரியிலிருக்கும் ஸ்ரேஷ்டமான பத்மங்களைக் கொண்டுவந்து தரவேணுமென வாயுதேவன் யவ்விதமாகவே கொண்டுவர யவரை பார்த்து இந்த ஸவிஸ்தாரத்தை யாருக்கும் தெரியப்படுத்த வேண்டாமென அப்படியே சம்மதித்து வாயுபகவான் மறைந்தார். பிறகு தன் கையிலிருக்கும் குந்தலாயுதத்தினால் ஒரு குளத்தை வெட்டி யந்த தாமரை கமலங்களை யக்குளத்தில்விட்டு இரவு பகலும் மலர்ந் திருக்கும் பொருட்டு கிழக்கில் சூரிய நாராயண தேவாலயத்தை பிரதிஷ்டை செய்து பன்னிரெண்டு வருடம் ராஜனைப்போல் வேடம் தரித்து தவம் செய்தார்.

## ரம்பாதிகள் ஹரியை சோதித்தல்.

தேவேந்திரன் பூமியில் யாரோ யரசன் கோரமான தவம் செய்து தன்னுடைய பதவிக்குவர யெண்ணுகிருனென்று சங்கை யுள்ளவனாய் ரம்பா, ஊர்வசி, திலோத்தமை என்கிற தேவதாசிகளை தவத்தை பங்கப்படுத்த யனுபித்தான். அவர்கள் ஸ்ரீஹரி தவம் செய்யுமிடத்திற்கு வந்து புஷ்பங்களை கொய்துக்கொண்டும் கிளி களைப்போல் கலகலவென்று பேசிக்கொண்டும் பகபக வென்று சிரித் துக்கொண்டும் அநேக விதங்களாக மாய்கை செய்தார்கள். அதை ஸ்ரீஹரி தெரிந்துக்கொண்டு மந்தஹாஸராய் களிக்காமல் ஸ்வர்ண ஸஹஸ்ரதள பத்மத்தின்பேரிலே மனத்தை நிருத்தி யிருந்தார். அப்பொழுது அக்காந்தாமணிகள் ஸ்ரீஹரியைமோகித்து அவர்மேபரில் புஷ்பங்களை வீசியும், பரிஹாஸத்தோடு நகைத்துக்கொண்டும், நாட் யங்கள் செய்துகொண்டும் மனதை ரமிக்கும்படியான பாட்டுகளை பாடிக்கொண்டும் வீணைகள் வாசித்துக்கொண்டு அநேக லீலாவினோ தங்களைச்செய்தும் ஸ்ரீஹரி சலிக்காமல் இருக்கிறதைப் பார்த்து அலண்டு ஆச்சர்யமடைந்தார்கள்.

## ஸ்ரீஹரி மோஹினி தேவதையை சிருஷ்டி செய்தல்.

ஸ்ரீமந்நாராயணன் அப்பொழுது மோகினி தேவதையை சிருஷ்டித்து தன்னிடம் மிருக்கும்படி கட்டளையிட்டார். ரம்பாதிகள் அந்த மோஹினிதேவதையின் ரூபலாவண்யங்களை ப்பார்த்து வெட்கப் பட்டு தேவேந்திரனிடம் சென்று ஸ்வாமி அவர் நர நல்ல சாக்ஷாத் நாராயணமூர்த்தியே என்பதற்கு சந்தேகமில்லை யென்று சொல்ல தேவேந்திரன் ஸ்ரீஹரியை நரனென வெண்ணி பரிசோதித்தது அபசாரமென்று விசாரப்பட்டான். பிறகு ஸ்ரீஹரி மோகினிதெவ தையைப்பார்த்து நீ அங்கங்கு பக்த்தர்களால் பூஜிக்கப்பட்டிருந்து, யதாகதியை யடைவாயென்று சொல்லி அசையாமல் தவம்செய்துக் கொண்டிருந்தார்.

### லக்ஷ்மி கபில சம்வாதம்.

கபில மாமுனிவரைப்பார்த்து லக்ஷ்மிதேவி தனக்காக ஸ்ரீஹரி தவம் செய்கிறார். என்ன செய்வேனென்று சிந்திக்கையில் கபில மாமுனி லக்ஷ்மிதேவிக்கு ஸ்ரீஹரியின்பேரில் கோபமுண்டானதற்கு காரணமென்னவென்று கேட்டு தெரிந்து கொண்டு இவ்விதமாக சொன்னார். என்னை பெற்றதாயே, பிள்ளைக்கு பிள்ளையாகிய பிருகு வின்பேரில் இவ்வளவு கோபம் உண்டாயிருப்பது நியாயமல்ல மும் மூர்த்திகளைப்பரீக்ஷித்து ஸ்ரீஹரியின் பிரபாவத்தை பிரக்யாதி செய்வ தற்காக பிருகு அவ்விதமாய் நடந்தான். மேலும் ஸ்ரீஹரியை இவ் விதமாக கஷ்டப்படும்படி செய்தும் உன்னை நோக்கி இவ்வளவு தவம் செய்யும்படி செய்வித்தும் பதிவிரதைகளுக்கு தர்மமல்ல, ஆகையால் தாயே நீ ஸ்ரீஹரி மனதை நிருத்திருக்கும் கமலத்தில் தொடர்ந்து முல்லோகங்களும் மும்பத்து முக்கோடி தேவர்களும் மெச்சி கீர்த்தனைகள் பாட அந்த எம்பெருமான் திருவக்ஷத்தில் சேர் வாய். நான் சொன்னது நியாயமான படியால் மன்னிக்கவேணு மென லக்ஷ்மியம்மன் ஸ்ரீஹரியைவிட்டு வந்தது தன்னுடைய தப்பித மென்றெண்ணி அந்த ஜகதீசனை எம்பெருமானை மறுபடியும் சேர நிச்சயித்தாள்.

### அலர்மங்கா தேவியின் பிறப்பு.

ஸ்ரீஹரி மனதை நிறுத்திருக்கும் தாமரையின் வழியாக ஸ்ரீஹரி தவம்செய்த பதிமூன்றும் வருடத்தில் கார்த்திகை மாதம் சுத்த பஞ்சமி உத்திராடம் கூடிய வெள்ளிக்கிழமை சுபதினத்தில் மகா

சௌந்தர்யலாவண்ணிய பிரகாசத்தோடு பதினாறு வயதுள்ள யவ்வன கன்னிகா ரூபத்தை தரித்த நாலு கைகளுட்னும் கமலத்தையும் புஷ்பமாலையும் தரித்துக்கொண்டு பிரசன்னமாகையில் ஆகாயத்தில் பிரம்மாதி தேவர்கள் புஷ்பங்களை வருஷித்தார்கள். அப்ஸராஸாதி தேவதாவிகள் வீணாதி கான நிருத்தியங்கள் செய்து ஜெய ஜெய லக்ஷ்மி அலர் மங்காதேவி யென்று கொண்டாடினார்கள்.

## லக்ஷ்மி ஹரியை அடைதல்

லக்ஷிமி யம்மன் பேசாமல் நிற்பதைப்பார்த்து பிரம்மாதி தெய்வங்கள் அந்த சுபலக்கினமே ஜெகதீசருடைய திருமார்பில் சேருவதற்கு நல்லகால மென்று பிருகுவுக்கு சைகை செய்தார்கள். அப்பொழுது பிருகு முன் வந்து என்னை பெற்ற தாயே, நான் செய்த குற்றங்களை மன்னிக்க வேண்டும். சரணாகதன், கருணை யெனும் கடலை உன் கண்களில் தரித்த கமலால் பாபெற்ற தாயே சரணனென்றேனெந்த அகுற்றங்களாவற்றும் க்ஷமித்து காத்தருளவாய் தரணியில் தான் பெற்ற பிள்ளைகள் செய்திடும் தப்பிதம் தாயல்லவோ மரந்திட்டு சிறியனை மன்னிக்கவேண்டுமதுமாத நீ யரியாததோ. என்று சொல்ல லக்ஷ்மி தேவிக்கு அநந்த சந்தோஷ முண்டாய் விட்டது. அப்பொழுது ஸ்ரீலக்ஷ்மியை, ஹரியை சேருமென்று பிரம்மாதி தேவகணங்கள், மலர்ந்தட்ட கமலத்தில் மங்கையாய் தங்கமாய் மாணிக்க மணியுமாயும் அலர்மேல் தேவியென யனைவருங்கொண்டாட யகிலாண்டகோடி யெல்லாம், கலகலென்றானந்த கடலிலே மூழ்கவே கருணையோடெங்கள் தாயே நிலமாக ஹரி மார்பில் நிலையாக கூடிகொண்டு நின்று வாழ்ந்தருள்வாயே என்று ஸ்தோத்திரம் செய்ய லக்ஷ்மி கையிலிருந்த பூமாலையை பகவான் கழுத்தில் தரித்து மறுபடியும் வக்ஷத்தில் சேர்ந்தாள்.

இவ்விஷயம் பத்ம புராணத்தில் அடியில் வருமாரு எழுதப்பட்டிருக்கிறது. இந்த போதும் கல்பாந்திர விவஸ்தையினால் ஏற்பட்ட தென்றறியலாம். பிருகு மகாவிஷ்ணு மார்பை உதைத்தபோது லக்ஷ்மிதேவி பாதாளத்திற்குச்சென்று கபில மகா ரிஷியால் பூஜிக்கப்பட்டு பிறகு கொல்லாபுரம் போய் திருவேங்கடன் மலைக்கு தென்பாகத்தில் சுவர்ணமுகி நதி தீரத்திலிருக்கும் சுகாஸ்ரமத்தில் ஏகாந்தமாய் வசித்து வந்தாள். வெங்கடேஸ்வரர் லக்ஷ்மிதேவியைத்தேடிக்கொண்டு அசரீர வாக்கினால் லக்ஷ்மிதேவி இருப்பிடம் தெரிந்து அந்த சுகாஸ்ரமத்திற்குச்சென்று தன்கையிலிருக்கும் குந்தலாயுதத்தினால் ஒரு குளத்தை நிர்மித்து தேவலோகத்திலிருக்கும் பத்ம சரோவரத்திலிருந்து தங்கமயமான தாமர புஷ்பங்களைக்கொண்டுவந்து அந்த

குளத்தில் போட்டு அந்த புஷ்பங்கள் இரவு பகலும் மல... பொருட்டு அவ்விடத்தில் சூரிய நாராயணதேவாலய மொன்றை பிரதிஷ்டை செய்து பனிரெண்டு வருஷம் லக்ஷ்மி உபாசனை செய்துக்கொண்டு லக்ஷ்மி மந்திரத்தை ஜெபித்து தவம்செய்தார். பதிமூன்றுவது வருடம் கார்த்திக சுத்த பஞ்சமி சுக்கிரவாரம் உத்திரா நக்ஷத்திர தினத்தில் லக்ஷ்மி தேவி அலர்மேல் மங்கை அனேக தாசி ஜனங்களுடன் சர்வாபரண பூஷிதயாய் ஆகாயத்தினின்று தேவதைகள் புஷ்ப வருஷம் வருஷிக்க ரம்பை முதலிய அப்ஸர ஸ்திரீகள் நாட்டியமாட கந்தருவர்கள் கீதங்கள்பாட தாமரை புஷ்பத்தினின்று 16 வயதுள்ள யௌவன ஸ்திரீயாக உற்பித்து சுவாமியைக் கண்டு தான் கொண்டுவந்த நீலோத்பல புஷ்பமாலையை சர்வலோக சரண்யராகிய அவர் கழுத்தில் சாத்தி ஆலிங்கனம் செய்துக்கொண்டு அவ்விடத்திலே இருக்கும்படியாக விரும்பினாள்.

---

## ஸ்ரீதிருச்சானூர் அலர்மேல் மங்காபுரம்.

ஸ்ரீலக்ஷ்மி யம்மன் அவதரித்த தாமரை குளமாகையால் இதற்கு பத்ம சரோவர தீர்த்தமென்று பெயர் உண்டாயிற்று. ஹரிவக்ஷத்தில் லக்ஷ்மி பிரவேசித்த உடனே பிரம்ம ருத்திராதிகணங்கள் அந்த தீர்த்தத்தை அனேக விதங்களாக கொண்டாடி தங்கள் சிரங்களின் பேரில் ப்ரோக்ஷித்துக்கொண்டார். ஆகையால் கார்த்திகை மாதத்து சுத்த பஞ்சமி தினத்தில் இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவர்கள் லக்ஷ்மி கடாக்ஷம் உள்ளவர்களாய் சகல சுகங்களை அனுபவிப்பார்கள்.

பத்ம சரோவரமுள்ள இக்ஷேத்திரம் பத்மராஜ புரமென்னும் கீழ் திருப்பதிக்கு 3 மையில் இருக்கிறது. இது சுகாஸ்ரமம் இதில் சுகர் குமாரனாகிய சாயாசுகர் வசிப்பதாக புராண சம்மதம் ஆகையால் இதற்கு திருச்சானூரென்றும் பெயர் உண்டாயிற்று பத்மத்தில் உண்டானபடியால் லக்ஷ்மி தேவிக்கு பத்மாவதி தேவதையென்றும் மலர்ந்த பத்மத்தில் பிறந்ததினால் அலர்மங்காதேவதை யென்றும் அந்த க்ஷேத்திரத்துக்கு அலர்மங்காக்ஷேத்திரமென்றும் பெயருண்டாயிற்று. ஸ்ரீமகாவிஷ்ணுவினால் பிரதிஷ்டை செய்த சூரிய தேவாலயம் திருக்குளத்தின் கரையின்பேரில் இருக்கிறது. ஸ்ரீசுகரால் ஏற்படுத்திய ஹபல ராமசமேத ஹரிவேணுகோபால ஸ்வாமி தேவாலயமும் இருக்கின்றது. ஸ்ரீசுந்தரவரதராஜப்பெருமாள் சன்னதியும் இவ்விடத்திலிருக்கின்றது. இந்த புறத்திற்கு மேற்கில் யோகி மல்லவரம் என்று ஓர் சிறிய கிராமம் இருக்கின்றது. பூர்வத்தில் தபோவர்தர்கள் சங்கம் சேரும்படியான இடம் புராண நிர்மிதமான சிவதேவாலயமும் யிருக்கின்றது. பூர்வத்தில் முனிகள் ஆஸ்ரமங்களைக்கட்டிக்கொண்டு தபோ யக்கியங்கள் செய்தபடியால் இந்த பெயர் உண்டாயிற்று. திருச்சானூரில் பிரதி வருஷந்தோரும் கார்த்திகை மாதத்தில் 10 நாள் சற்பகவல்லியாகிய அலிமேலு மங்கை-

...ம்மோற்சவம், பங்குனியில் 9 நாள் பத்மசரோவா தீர்த்தத்திற் தெ... உற்சவமும் பிரதி வெள்ளி கிழமை தோட்ட உற்சவமும் நடந்து வருகின்றது.

## ஸ்ரீ திருப்பதி பிரம்மோற்சவம்.

ஸ்ரீவெங்கடேச பெருமாள் அலிமேலுமங்கா தேவியை மார்பில் அணைத்து ஸ்ரீ திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்தில் நிற்க தன் குமாரனாகிய பிரம்மதேவர் வந்து ஸ்வாமி உங்களுக்கு ரதோற்சவம் நடத்தவேணு மென்றுவலுடையவனுய் இருப்பதால் உத்திரவளிக்க வேண்டுமென பிரார்த்திக்கையில் தன் புத்ரன் வாக்கியங்களைக்கேட்டு ஆனந்தித்தவராய் சம்மதித்தார். பிரம்மோற்சவத்தை நடத்துவதற்காக நூதன ரதத்தை செய்யும்படி விஸ்வகர்மாவுக்கு உத்திரவு செய்தார், அந்த ரதம் முடிந்ததே முதல் நாள் சேஷவாகனத்தின் பேரிலும் 2-வது நாள் அன்னவாகனத்தின்பேரிலும் 3வது நாள் சிம்ஹவாகனத்தின் பேரிலும், அன்றை ராத்திரி புஷ்பவாகனத்தின் பேரிலும் 4வது நாள் பூபால உற்சவமும் அன்றைஇராத்திரி கல்பகவிருக்ஷ உற்சவமும் 5வது நாள் ஆந்தோளி உற்சவமும் அன்றை ராத்திரி கருடோற்சவமும் 6வது நாள் அனுமந்தர்கள் உற்சவமும் அன்றை மாலை வசந்தோற்சவமும் இராத்திரி யானைவாகனுேற்சவமும் 7வது நாள் காலையில் சூரியபிரப உற்சவமும் இராத்திரி சந்திரபிரப உற்சவமும் 8வது நாள் சோடச மகாதான கிருத்திகங்களை நடப்பித்து பிறகு தங்கயைப்போல் பிரகாசிக்கும் நவரத்தின கசிதமாய் அனேகவர்னங்களுடன் ஜொலித்துக் கொண்டிருக்கும் திவ்விய ரதத்தின்பேரில் ஸ்ரீபூநீளா சமேதராகிய வெங்கடேஸப்பெருமாளை ஆசனருடராகி அமர்த்தி பிரம்மாதி தேவ கணங்கள் நடப்பிக்க சகல திக்பாலர்களும் கருட கந்தர்வ கின்னர கிம்புருஷ சித்தவித்யா தரர்கள் சேவிக்க தேவ துந்துபிகள் கோஷிக்க மகா அற்புதமாக ரம்பா மேனகை ஊர்வசி திலோத்தமாதி தேவதாசிகள அந்த ரதத்தின் பேரில் புஷ்பங்களை இறைத்து ஆடிபாடி ஹரியை கொண்டாடினார்கள், அப்பொழுது பக்தகோடிகள் ஹரிநாமத்தை ஸ்மரித்தார்கள். கவிகள் கீர்த்தனைகளைபாடினார்கள் பண்டிதர்களும் பிராம்மணர்களும் உபநிஷத் வேத வாக்கியங்களை சாதித்தார்கள். பிராம்மண ஸ்திரீகள் பாட்டுகளை பக்தியோடு சுவாமியைபாடி யாடி கொண்டாடினார்கள்.

அந்த ரதோற்சவத்தை பார்பதற்காக 56 தேசத்தரசர்களும் அவர்களுடைய வாகனங்களையேரி பரிவாரங்களுடன் வந்தார்கள். இவ்விதமாக அதுமுதல் புரட்டாசிமாதத்தில் உத்திரா நக்ஷத்திரத்தில் பிரதி வருஷமும் ஸ்ரீவேங்கடேஸபெருமானுக்கு பிரம்மோற்சவம் நடந்தேறிவருகிறது.

---

## திருச்சானூர் அலர்மேலுமங்கையம்மன் பிரம்மவுத்ஸவ கும்மி.

சித்திரம்போன்ற மடமைலே
இந்த திருச்சானூர் வுத்ஸவத்தை
பத்தினி பெண்களா எத்திசைகளும்
பாவையேபார்க்கலாம் வாங்களடி. 1

சுற்றிலும் பிராம்மணாள் வீடுகளமைத்து
நடுசிங்காரமானதோர் மண்டபமும்

எத்திசைபார்த்தாலும் சந்திரன் சூரியன்போல்
ஏற்றிவைத்த தீபம் என்னசெய்வேன். 2

அங்கங்கே பஸ்திய ஸ்தானங்களும்
நல்ல ஆனதோர் நாட்டிய பந்தங்களும்
எங்கும்பரவிய வெகுஜனகூட்டங்கள்
எத்தபடி நிர்குறார் பாருங்கடி 3

பாருங்கடி சுற்றிவாருங்கடி நீங்கள்
பக்ஷமாயொன்றாகவே பாருங்கடி
கோரியமங்கையின் வுத்ஸவவேடிக்கை
எப்படி செய்குறார் பாருங்கடி 4

எத்தனையோவித பக்ஷிகளமைத்து
எத்தநகைகளை பூட்டிவிட்டு
மூற்றிலும் அரசர் மெச்சி புகழ்ந்ததோர்
பஞ்சமி வுத்ஸவ பாருங்கடி. 5

தங்கத்தினால் செய்த கருடவாஹனம்
பக்ஷமுடன் சித்திரவேலைசெய்து
எங்கும் பொருந்தவெ நல்லபச்சைமாணிக்கம்
இட்டிழைந்ததை பாருங்கடி. 6

தேவர்கள் செய்ததோர் அனுமந்தவாஹனம்
பத்மாவதியேறும் வாகனதும்
சந்தோஷமாகவே வந்ததோர் மங்கையின்
மேன்மையை சொல்லியே பாடுங்கடி. 7

வேடிக்கை பந்தலை பாருங்கடி
ஜனங்கள் எப்படி பேசுரார் பாருங்கடி
குளத்தை சுற்றி நாம் பார்தாலும்
பிரபுகள் கூட்டங்கள் எப்படி நிர்குறார் பாருங்கடி 8

தங்கநிரமுள்ள பத்மாவதியம்மன்
தங்கபொருளுள்ள ஆடவளாம்
எங்கும்தேடிய அலமேலு மங்கையை
சேவித்து கும்மியடியுங்கடி. 9

ஆகாயவாணங்கள் தான்வெடிக்க
அப்போ அன்புடன் நக்ஷத்திரங்கள் போல்துலங்க
மேலானபாணங்கள் தான்வெடிக்க
அதை மெல்லிய நீங்கள் பாருங்கடி. 10

அன்னதானங்கள் செய்தார்கள் அன்று
ஆலயவுத்ஸவம் செய்தார்கள்
எண்ண வண்ணாக பஞ்சமி ஸ்நானங்கள்

...பபடி செய்குரார் பாருங்கடி. 11

மீனுக்ஷியம்மன் கோவிலும்
காஞ்சி காமாக்ஷியம்மன் சன்னதியில்
மேலானகாசி ராமேஸ்தரத்தில்
மேலான திருச்சானூர் பாருங்கடி. 12

இருபத்திநான்கு ஜில்லாமுழுமையும்
அங்கங்கே வேடிக்கை தானமைத்து
வுலகம்புகழவே அலர்மேலுமங்கையை
சேவித்து கும்மியடியுங்கடி. 13

திருச்சானூர் அலர்மேலு மங்கைக்கு
செய்த பஞ்சமி உக்ஸ்வத்தை
மிதமாய்பாண வேடிக்கை செய்துமே
சேர்ந்தமங்கையை பாருங்கடி. 14

சத்திய விஜயநகர கும்பகோணம்
சார்ந்த அண்ணுமலை க்ஷேத்திரத்தில்
எத்தனையோ பாணங்கள் சிலவழித்து பக்தர்கள்
வுத்தமர் வாரதை பாருங்கடி. 15

தஞ்ஜைகுடந்தை மதுரை நகர்முதல்
இன்னும் பலபலவூர்களெல்லாம்
கன்னியமாகவே காசுசிலவிட்டு
பக்தர்கள் வருவதை பாருங்கடி. 16

சீமையுலகெங்கும் வேதியர்மார்களும்
திரந்த ஞானிகள் கூட்டங்களும்
நேயமாக மங்கையின் வுத்ஸவம்
நின்றுமே சேவித்து பாருங்கடி. 17

ஈசன் வசிக்கும் கைலாயங்கிரியைபோல்
எண்ணில்லாத திருச்சானூர் வேடிக்கையை
பூர்த்தியாய் செய்த பஞ்சமி வுத்ஸவத்தை
புகழ்ந்து கும்மியடியுங்கடி. 18

மங்களமாகவே திருப்பதி வேடிக்கை
எங்கும் புகழ்ந்துமே தான்படிக்க
சிங்காரமாகவே கன்னய்யநாயுடு
சொல்லி எழுதினன் பாருங்கடி. 19

## ஸ்ரீவேங்கடேஸ்வர சிங்கார கும்மி.

### மஹிமை விளங்கும் என்ற வர்னமெட்டு.

மஹிமை விளங்கும் திருப்பதிநகர் வேங்கடேசமூர்த்தி
அவர்பேர் விளங்கும் கீர்த்திபோக்கும் பிரம்மஹத்தி

ஸ்வாமியின்பேரில் கும்மிபாட
சரஸ்வதியம்மன் றுணையே 1

எங்கும் விளங்கும் ஏழுமலையின் இன்பமான க்ஷேத்திரம்
புஷ்கரணி அமுர்த்தீர்த்தம்
கருடோத்சவ பிரதக்ஷணம்
அவருடைய மகிமையும் 2

அழகான துவஜஸ்தம்பமும் நேர்த்தியானமண்டபமும்
அலர்மேலுமங்கையம்மாளுடைய கிருபையும்
மங்கையம்மாள் வுன்கிருபையே
ஜகத்திலெங்கும் புகழ. 3

தேவாதி தேவரெல்லாம் அவர் புகழ்பாட
நாலாயிரம் பாடவே தங்களைகொண்டாட
மங்கையம்மாள் வுன்கிருபையே
ஜகத்தி லெங்கும் புகழ. 4

சேஷாத்திரி மலையின்மீது ஸ்ரீனிவாசமூர்த்தி
புஷ்கரணியில் ஸ்நாநம் பண்ணுகிறநேர்த்தி
சகலபாப நிவர்த்தி
பக்தி பண்ணினபேர்களுக்கு முக்திகொடுக்கும் மூர்த்தி 5

பாவாஜிமார்கள் கூடிக்கொண்டு போட்டார்களொரு
திட்டம் படிடப அளர்ந்து பார்த்தால் மட்டம்
வழியையழித்து கட்டினசட்டம் வேங்கடேஸ்வாருக்கு
இஷ்டம் சங்கையற்ற பேர்கள்வந்து ஸ்நானம் பண்ணுகிற
கூட்டம். 6

கருணையுள்ள மங்கையே என்கருத்தினி லிருப்பாயே
மாடவீதி வருகுப்போது கண்ணாலே நான்கண்டேன்
பாததரிசனமு தன்னை காத்து ரக்ஷியும் என்னை
அந்தகாலத்தில் [illegible]கொடுத்து அழைத்துபோகசொன்னேன். 7

பூமிகளு[illegible] [illegible]ன [illegible]லோக வைகுண்டம் அவ
வர் [illegible]தகாலம் எங்கு[illegible] நிறைந்த திருமலையின் இன்பமான
க்ஷேத்திரம் பாப[illegible] அமுர்த்த தீர்த்தம் அ[illegible]லை
லய கூப்பி தரிசித்தவருக்கு கிடைக்குமே வைகுண்டம் 8

[illegible]ருடைனே பாடிடவும் யாவர்களும் புகழ்ந்து
க[illegible]ணையுள்ள ஸ்ரீவியாஸ அச்சுகூடத்தைகருத்துதனிலே
நினைத்து அருமையுள்ள [illegible]தலத்தில் குதித்துபாடநீயே
பிரியமுடன் [illegible]னையன்னை அருள்புரிவாய் தாயே. 9

---

Printed at the Sri Vyasa Press, Tirupati. 1930. C. 2000.